# கும்பகோணம் மாநகராட்சி

## அவசரக்கூட்ட அழைப்பிதழ்

## கும்பகோணம் மாமன்றம்

அன்புடையீர்,

கும்பகோணம் மாநகராட்சியின் மாமன்ற அவசரக்கூட்டம் வருகின்ற 13.03.2026 **வெள்ளிக்கிழமை காலை** 10.00 மணியளவில் கும்பகோணம் மாநகராட்சி புதிய அலுவலகத்தில் உள்ள **திரு.கோசி.மணி மாமன்ற வளாகத்தில்** உள்ள **திரு.இரா.துரை மாமன்ற** கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இடம் : கும்பகோணம்**
**நாள்** : 12.03.2026

**மேயர்**
**கும்பகோணம் மாநகராட்சி**

**இணைப்பு** : பொருள்களில் நிரல்
**பெறுநர்** : **அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்**
**நகல்** :
1. **பாராளுமன்ற உறுப்பினர்**, மயிலாடுதுறை
2. **மாநிலங்களவை உறுப்பினர்**
3. **சட்டமன்ற உறுப்பினர்**, கும்பகோணம்
4. **அனைத்து நாளிதழ்கள்**

| மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் 13.03.2026ம் | மார்ச் மாதம் அவசரக் கூட்ட தீர்மானம் வரிசை எண் மற்றும் மாமன்ற கூட்டப்பொருள் | மாமன்ற தீர்மான எண் |
|---|---|---|
| | **தீர்மானம் 1.** கும்பகோணம் மாநகராட்சி துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் கீழ்கண்டவாறு இரங்கல் தீர்மானத்தினை கொண்டு வந்தார்.<br>கும்பகோணம் நகரில் பாரம்பரிய குடும்பத்தில் பிறந்து, தேசிய இயக்கமான காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, மக்களுக்காக பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்ட திருமிகு. S.குமாரசாமி B.A. அவர்கள், கும்பகோணம் நகர் மனறத் தலைவராகப் போறுப்பேற்று, மக்கள் பணியாற்றி, கும்பகோணம் நகரின் வளர்ச்சியில் முழுமையாக ஈடுபட்டுத் தன்னலம் கருதாமல் வாழ்ந்தவர். கும்பகோணம் அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அவருடைய குடும்பத்திற்கு சொந்தமான இடத்தினை தானமாக வழங்கியவர்கள். தன்னுடைய வயது மூப்பின் காரணமாக, கடந்த 02.03.2026–ஆம் நாள் இயற்கை எய்தினார். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், அவர் சார்ந்திருந்த இயக்கத் தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை இம்மாமன்றம் தெரிவித்துக்கொள்கிறது.<br>மேற்கண்ட இரங்கல் தீர்மானத்தினை துணை மேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மதிப்பிற்குரிய மேயர், மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. | 464<br>இரங்கல் தீர்மானத்தினை துணை மேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மதிப்பிற்குரிய மேயர், மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது. |
| | **தீர்மானம் 2.** கும்பகோணம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திரு.அனந்தராமன் அவர்கள் கீழ்கண்டவாறு நன்றி தீர்மானத்தினை கொண்டு வந்தார்.<br>கும்பகோணம் மாநகராட்சி ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவிலில் (பிரம்மன் கோவில்) 12 ஆண்டுகளுக்கு பிறகு 2026, மார்ச்1 முதல் மார்ச் 10 வரை நடைபெற்ற ஸ்ரீ அத்திவரதர் தரிசனத்திற்கு, சுமார் 6 இலட்சம் பக்தர்கள் வருகை புரிந்த கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்து கொடுத்து அனைவருக்கும் இடையூறு இன்றி தரிசனம் செய்ய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர்கல்விதுறை அமைச்சர்** அவர்களுக்கும், மாநிலங்களவை உறுப்பினர் அவர்களுக்கும், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், கும்பகோணம் மாநகராட்சி மேயர், துணைமேயர், ஆணையர் அவர்களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும், மாநகராட்சி ஊழியர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும், அனைத்து துறை அதிகாரிகள், ஊழியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்துப் பக்தர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.<br>மேற்கண்ட நன்றி தீர்மானத்தினை மாமன்ற உறுப்பினர் திரு.அனந்தராமன் அவர்கள் முன்மொழிய மதிப்பிற்குரிய மேயர், துணை மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. | 465<br>நன்றி தீர்மானத்தினை மாமன்ற உறுப்பினர் திரு.அனந்தராமன் அவர்கள் முன்மொழிய மதிப்பிற்குரிய மேயர், துணை மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது. |
| | **தீர்மானம் 3.** கும்பகோணம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி.ப்ரீத்தி பாண்டியன் அவர்கள் கீழ்கண்டவாறு நன்றி தீர்மானத்தினை கொண்டு வந்தார்.<br>கும்பகோணம் மாநகராட்சி புதிய அலுவலகத்தல் உள்ள மாமன்ற வளாகத்திற்கு மாண்புமிகு முன்னாள் அமைச்சர் **திரு.கோ.சி.மணி** அவர்கள் பெயரையும், மாமன்ற கூட்ட அரங்கிற்கு **முன்னாள் நகர்மன்ற தலைவர் மிசா. இரா. துரை** அவர்கள் பெயரையும் சூட்ட அணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மேயர், துணைமேயர், ஆணையர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் 40–வது வட்ட தி.மு.க. சார்பாகவும், பொதுமக்கள் சார்பாகவும் நன்றி.. நன்றி..<br>மேற்கண்ட நன்றி தீர்மானத்தினை மாமன்ற உறுப்பினர் திருமதி.ப்ரீத்தி பாண்டியன் அவர்கள் முன்மொழிய மதிப்பிற்குரிய மேயர், துணை மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. | 466<br>நன்றி தீர்மானத்தினை மாமன்ற உறுப்பினர் திருமதி.ப்ரீத்தி பாண்டியன் அவர்கள் முன்மொழிய மதிப்பிற்குரிய மேயர், துணை மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது. |
| | **பொருள் எண்.1**<br>இம்மாநகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சடித்து வாங்குவதற்கு 2025–2026 ஆம் ஆண்டிற்கு அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனத்திலிருந்து வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேற்படி செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | 467 அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது |

அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன் கோ சர்வீஸ், திருச்சி கூட்டுறவு நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4410 / 2022 / சி5

**பொருள் எண்.2**

இம்மாநகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுதுபொருட்கள், கணினி பிரிவுகளுக்கு தேவையான டோனர்கள் வாங்குவதற்கு 2025–2026 ஆம் ஆண்டிற்கு அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனத்திலிருந்து வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன் கோ சர்வீஸ், திருச்சி கூட்டுறவு நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4411 / 2022 / சி5**

468 அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

**பொருள் எண்.3**

கும்பகோணம் மாநகராட்சிக்கு எதிராக உள்ளூர் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றம், உயர்நீதிமன்றங்களில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. மேற்படி மாநகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் முடிவற்ற வழக்குகளுக்கும், புதிதாக தொடரப்பட்ட வழக்குகளுக்கும் வழக்கறிஞர் கட்டணம், மேல்முறையீடு செய்த மற்றும் தேவையேற்படின் மேல்முறையீடு செய்யவேண்டிய வழக்குகள், சட்டக்கருத்துரை பெறுவதற்கான வழங்கறிஞர் கட்டணம், வழக்கின் தன்மைகேற்ப நீதிமன்றத்திற்கு தொகை ஏதும் செலுத்த வேண்டியிருப்பின் நீதிமன்ற கட்டணம் மற்றும் மாநகராட்சியால் வழக்கு தொடரவேண்டி இருப்பின் அதற்கான கட்டணம் போன்றவை செலுத்தவேண்டிய நிலை உள்ளது. இது அவசர நீதிமன்ற நடவடிக்கைகள் என்பதால், மேற்படி வழக்கு செலவினங்களுக்கான உத்தேச செலவினமாக வருவாய் நிதித்தொகை ரூ.10,00,000/–மற்றும் குடிநீர் வடிகால் நிதி தொகை ரூ.2,00,000/–க்கான செலவினங்களுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதி அளிக்கலாம்

ந.க எண்.3326 /2022/சி6

469 அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்.4**

இம்மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம்–2 காசிராமன் தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாக கடைகள் 4 மற்றும் 5 ற்கு 11.03.2026 அன்று மூன்றாவது முறையாக மறுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கடை எண்.5 ற்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளன. ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கடை எண்.4 ற்கு ஒப்பந்தப்புள்ளி தொகை கோரவும், ஏலம் கோரவும் எவரும் முன்வரவில்லை. 11.03.2026 அன்று கீழ்கண்டவாறு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளன

| வ. எ ண் | கடை எண் | பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | காசிராமன் தெரு புதிதாக கட்டப்படுள் ள கடை எண்–05 | திரு.எஸ், பொன்னுசாமி 20,கோதண்டபா ணி தெரு, கும்பகோணம் | ரூ.15,100/– | இவ்வினத்திற்கு வாடகையானது பொதுப்பணி துறை மதிப்பின் படி ரூ.9600/– மற்றும் அரசாங்க மதிப்பு தொகை ரூ.15,000/– ஆகும். மேற்படி கடை எண்.05–ற்கு வரப்பெற்ற திரு.எஸ், பொன்னுசாமி என்பவரின் ஒரு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,100/– ஆனது, பொதுப்பணித்துறை மதிப்பினை விடவும், அரசாங்க மதிப்பினை விடவும் மற்றும் கடந்த 04.03.2026 அன்று நடைபெற்ற மறுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.9000/–ஐ விடவும் கூடுதலாக உள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கு |

**அலுவலக குறிப்பு:** அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.அ7/1069/2026**

470 அனுமதி வழங்கப்பட்டது

**பொருள்.5**

கும்பகோணம் மாநகராட்சி டாக்டர் மூர்த்தில் ரோட்டில் அமைந்துள்ள பழைய நகராட்சி அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அறையில் பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ.8.00 இலட்சம் (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள் 13.02.2026 அன்று பெற்று பின்பு மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 09.03.2026 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ, | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ, | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். செல்வா கன்ஸ்ட்ரக்சன் | 7,25,263.40 | 7,25,015.65 | மதிப்பீட்டை விட (–) 0.03% குறைவு |
| 2 | திரு. ட. சபரீசன் | 7,25,262.40 | 7,30,365.32 | மதிப்பீட்டை விட (+) 0.70% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையை மாற்றுத்திறனாளி நல அலுவலத்தில் இருந்து பெறப்படும் நிதியின் கீழ் செலவு செய்யலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (– ) 0.03% குறைவாக கொடுத்துள்ள மெசர்ஸ். செல்வா கன்ஸ்ட்ரக்சன் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .

**ந,கஎண். 12997–1/2026/இ2**

471 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

**பொருள்.6**

கும்பகோணம் மாநகராட்சி தாராசுரத்தில் அமைந்துள்ள பழைய பேரூராட்சி அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அறையில் பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ.8.00 இலட்சம் (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள். 13.02.2026 அன்று பெற்று பின்பு மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 09.03.2026 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்கு

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ, | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ, | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். செல்வா கன்ஸ்ட்ரக்சன் | 7,25,263.40 | 7,25,107.75 | மதிப்பீட்டை விட (–) 0.02% குறைவு |
| 2 | திரு. ட. சபரீசன் | 7,25,263.40 | 7,31,079.99 | மதிப்பீட்டை விட (+) 0.80% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையை மாற்றுத்திறனாளி நல அலுவலத்தில் இருந்து பெறப்படும் நிதியின் கீழ் செலவு செய்யலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.02% குறைவாக கொடுத்துள்ள மெசர்ஸ். செல்வா கன்ஸ்ட்ரக்சன் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .

**ந,க எண்.12997–2 /2026/இ2**

472 அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

**பொருள்.7**

கும்பகோணம் மாநகராட்சி பாதாள சாக்கடை கழிவு நீர் உறிஞ்சும் வாகன (TN.68 F5739) மற்றும் ஜெட்ராடிங்(TN.68 F5729) வாகனங்களில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள் 13.02.2026 அன்று அனுமதி பெற்று பின்பு மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 09.03.2026 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ, | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ, | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். இன்பிரான் பிரைவெட் லிமிடேட் | 2,87,302.86 | 2,86,958.30 | மதிப்பீட்டை விட (–) 0.12% குறைவு |
| 2 | மெசர்ஸ். செல்வா கன்ஸ்ட்ரக்சன் | 2,87,302.86 | 2,97,214.86 | மதிப்பீட்டை விட (+) 3.45% அதிகம் |

473 அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் செலவு செய்யலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (– ) 0.12% குறைவாக கொடுத்துள்ள மெசர்ஸ். இன்பிரான் பிரைவெட் லிமிடேட் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .

**ந.க எண். 1988 /2026/இ2**

---

**பொருள்.8**

கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பாதாள சாக்கடை இயந்திரகுழிகளில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்ய பயன்படுத்தப்பட்டு வரும் ஜெட்ராடிங் (TN68 AM 7485) மற்றும் ( TN68AM7486) வாகனங்களில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ரூ.2.20 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்.13.02.2026 அன்று அனுமதி பெற்று பின்பு மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 03.03.2026 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ, | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ, | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். வைபிரண்ட் பவுண்டேசன் | 2,09,332.00 | 2,08,860.00 | மதிப்பீட்டை விட (–) 0.23% குறைவு |
| 2 | திரு.சுந்தரம் | 2,09,332.00 | 2,09,922.00 | மதிப்பீட்டை விட (+) 0.28% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் செலவு செய்யலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.23% குறைவாக கொடுத்துள்ள மெசர்ஸ். வைபிரண்ட் பவுண்டேசன் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .

**ந..க எண். 1986 /2026/இ2**

474 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

---

**பொருள்.9**

கும்பகோணம் மாநகராட்சி பாதாள சாக்கடை இயந்திரகுழிகளில் உள்ள கசடுகளை அள்ளும் வாகனங்களில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ரூ.2.60 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள் 13.02.2026 அன்று அனுமதி பெற்று பின்பு மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 03.03.2026 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ, | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ, | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். வைபிரண்ட் பவுண்டேசன் | 2,56,107.20 | 2,54,311.24 | மதிப்பீட்டை விட (–) 0.70% குறைவு |
| 2 | திரு.சுந்தரம் | 2,56,107.20 | 2,58,101.40 | மதிப்பீட்டை விட (+) 0.78% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் செலவு செய்யலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (– ) 0.70% குறைவாக கொடுத்துள்ள மெசர்ஸ். வைபிரண்ட் பவுண்டேசன் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .

**ந.கஎண்.1987/2026/இ2**

475 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

பொருள்.10

கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பாதாள சாக்கடை இயந்திரகுழிகளில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்ய பயன்படுத்தப்பட்டு வரும் ஜெட்ராடிங் (TN.68 AA7416) மற்றும் (TN 68 A1294) வாகனங்களில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ரூ.7.60 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும் ) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்.13.02.2026 அன்று அனுமதி பெற்று பின்பு மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 03.03.2026 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | குறைவு அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். வைபிரண்ட் பவுண்டேசன் | 7,09,104.48 | 7,06,719.70 | மதிப்பீட்டை விட (–) 0.34% குறைவு |
| 2 | திரு.சுந்தரம் | 7,09,104.48 | 7,21,121.60 | மதிப்பீட்டை விட (+) 1.69% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் செலவு செய்யலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.34% குறைவாக கொடுத்துள்ள மெசர்ஸ்.வைபிரண்ட் பவுண்டேசன் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். **ந.க எண். 1989 /2026/இ2**

476 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

பொருள்.11

கும்பகோணம் மாநகராட்சி1–மண்டலம்––கரிக்குளத்தில் உள்ள Compost yard ல் நோய்வாய்ப்பட்ட கைவிடப்பட்ட விலங்குகள் தங்குவதற்கு காப்பக கட்டிடம் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.46,00,000/– (ரூபாய் நாற்பதாறு இலட்சம் மட்டும்) 11.03.2026 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் ,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறைவு /அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ்.மித்தேஷ் கன்ஸ்ட்ரக்ஸன் | 4446225.75 | 4445671.69 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.01 % குறைவு |
| 2 | மெசர்ஸ்.ஏபி பில்டர்ஸ் | 4446225.75 | 4467632.93 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.48 % அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ). மேற்கண்ட பணியினை ) வது மத்திய நிதிக்குழு மானியம்15Untied Gran மாமன்றத்தின் பார்வைக்கும்,பதிவிற்கும். **ந.க.எண் 2221/2026/E2**

477 அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்.12

கும்பகோணம் மாநகராட்சியில் பொதுப் பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொது சுகாதாரப் பிரிவுகளில் தற்போது பல்வேறு திட்டப் பணிகள், திட்ட அறிக்கைகள் தயார் செய்யவும், திட்டப் பணிகளுக்காக விரிவான திட்ட மதிப்பீடுகள் மற்றும் பிரேரணைகள் அரசு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் உட்பட பல்வேறு உயர் அலுவலர்களால் கோரப்படும் விபரங்கள், அறிக்கைகள் தயார் செய்ய போதிய தட்டச்சர்கள் இல்லாமையால் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) முறையில் மூன்று தட்டச்சர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க. எண் 3103986/2025/ஜி2, நாள் 21.07.2025ன்படி 2025–2026ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலை விகித தினக்கூலி அடிப்படையில் அமர்த்திக்கொள்ள மாமன்றம் அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் 10.02.2026 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

478 அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ, | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ, | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். AB பில்டர்ஸ், கும்பகோணம். | 4,45,803.00 | 4,45,803.00 | மதிப்பீட்டிற்கு இணையான விலை விகிதம் |
| 2 | திருவாளர்கள். மித்தேஷ் கன்ஸ்ட்ரக்சன் கும்பகோணம். | 4,45,803.00 | 488700.00 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (+) 9.62 % அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு இணையான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்.ஏ.பி. பில்டர்ஸ், கும்பகோணம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க. எண் 3103986/2025/ஜி2, நாள் 21.07.2025ன்படி 2025–2026ஆம் ஆண்டு தினக்கூலி தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தினை ஒத்துள்ளதால், கும்பகோணம் திருவாளர்கள் ஏ.பி., பில்டர்ஸ் நிறுவனத்தாரின் ஒப்பந்தப் புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி செலவினத்தை 2025–2026ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிடலாம்.
3. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடர்ந்து பணி மேற்கொண்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண் 7759/2025/இ1**

| மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் 13.03.2026ம் | மார்ச் மாதம் அவசரக் கூட்ட தீர்மானம் (Table Subject) வரிசை எண் மற்றும் மாமன்ற கூட்டப்பொருள் | மாமன்ற தீர்மான எண் |
|---|---|---|
| | **பொருள்.1** (see below) | 479 அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது. |

**பொருள்.1**

கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் –1 வார்டு எண்–5, வெங்கடேஷ் நகர் பூங்கா புனரமைப்பு பணிக்கு ரூ.7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள். 10.02.2026ல் நிர்வாக அனுமதி பெற்று, 12.03.2026 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறைவு /அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. K.மணிகண்ணனன், கும்பகோணம் | 689851.83 | 689713.46 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் – 0.02% குறைவு |
| 2 | மெசர்ஸ்.செல்வா கன்ஸ்ட்ரக்சன், கும்பகோணம் | 689851.83 | 691730.51 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் +0.27% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட– 0.02% குறைவாக கொடுத்துள்ள திரு K.மணிகண்ணன், கும்பகோணம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதி – 2025–26ன் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு.

**ந.க.எண்: 2443/2026/E2**

**பொருள்.2**

கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 1–ல் வார்டு எண் 12 அ/மி. சக்கரபாணி கோவில் சுற்றியுள்ள தேரோடும் வீதிகளில் மின்சார வாரியத்தினால் புதிதாக மின் புதைவழித்தட மின்சார கேபிள் அமைப்பதற்காக தோண்டப்பட்ட சாலைப் பகுதிகளில் பேட்ச் பணி மேற்கொண்டு சரிசெய்யும் பணிக்கு சாலை சீரமைப்புக் கட்டணம் ரூ.43.00 இலட்சத்திற்கு மின்சார வாரியத்திடம் கோரி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் **மண்டலம் 1 வார்டு எண் 12 தியாகி ராமசாமி கோவில் தெரு, சக்கரபாணி வடக்கு தெரு மற்றும் சக்கரபாணி கீழ வீதி ஆகிய தெருக்களில் பேட்ச் செய்யும் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டிலான** பணிக்கு மதிப்புமிக்க ஆணையர் அவர்கள் 02.02.2026 அன்று நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் 24.02.2026 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறைவு /அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. ஆர்.அசோக்குமார் 239, அன்னை அஞ்சுகம் நகர், கும்பகோணம். | 12,43,548.83 | 12,43,401.81 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (–) 0.01% குறைவு |
| 2 | திருவாளர்கள். மித்தேஷ் கன்ஸ்ட்ரக்சன் கும்பகோணம். | 12,43,548.83 | 12,71,812.28 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (+)2.27 % அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.அசோக்குமார், கும்பகோணம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கான செலவினத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மின்சார வாரியத்திடமிருந்து சாலை சீரமைப்புக் கட்டணம் பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**ந.க. எண் 889/2026/இ2**

480 அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது

**பொருள்.3**

கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 1–ல் வார்டு எண் 12 அ/மி. சக்கரபாணி கோவில் சுற்றியுள்ள தேரோடும் வீதிகளில் மின்சார வாரியத்தினால் புதிதாக மின் புதைவழித்தட மின்சார கேபிள் அமைப்பதற்காக தோண்டப்பட்ட சாலைப் பகுதிகளில் பேட்ச் பணி மேற்கொண்டு சரிசெய்யும் பணிக்கு சாலை சீரமைப்புக் கட்டணம் ரூ.43.00 இலட்சத்திற்கு மின்சார வாரியத்திடம் கோரி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் **மண்டலம் 1 வார்டு எண் 11 கல்யாணராமன் தெரு மற்றும் காலஹஸ்தீஸ்வரர் கோவில் தெரு ஆகிய தெருக்களில் பேட்ச் செய்யும் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டிலான** பணிக்கு மதிப்புமிக்க ஆணையர் அவர்கள் 02.02.2026 அன்று நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் 24.02.2026 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறைவு /அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. ஆர்.அசோக்குமார், 239, அன்னை அஞ்சுகம் நகர், கும்பகோணம். | 10,94,948.66 | 10,94,729.95 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (–) 0.02% குறைவு |
| 2 | திருவாளர்கள். மித்தேஷ் கன்ஸ்ட்ரக்சன் கும்பகோணம். | 10,94,948.66 | 11,19,827.28 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (+)2.27 % அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.அசோக்குமார், கும்பகோணம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு.

481 அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது

**அலுவலக குறிப்பு** :

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கான செலவினத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மின்சார வாரியத்திடமிருந்து சாலை சீரமைப்புக் கட்டணம் பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**ந.க. எண் 889–2/2026/இ2**

**பொருள்.4**

கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 1–ல் வார்டு எண் 12 அ/மி. சக்கரபாணி கோவில் சுற்றியுள்ள தேரோடும் வீதிகளில் மின்சார வாரியத்தினால் புதிதாக மின் புதைவழித்தட மின்சார கேபிள் அமைப்பதற்காக தோண்டப்பட்ட சாலைப் பகுதிகளில் பேட்ச் பணி மேற்கொண்டு சரிசெய்யும் பணிக்கு சாலை சீரமைப்புக் கட்டணம் ரூ.43.00 இலட்சத்திற்கு மின்சார வாரியத்திடம் கோரி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் **மண்டலம் 1 வார்டு எண் 12 சக்கரபாணி மேல வீதி மற்றும் காமாட்சி ஜோசியர் ஆகிய தெருக்களில் பேட்ச் செய்யும் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டிலான** பணிக்கு மதிப்புமிக்க ஆணையர் அவர்கள் 02.02.2026 அன்று நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் 24.02.2026 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** | **குறைவு /அதிகம்** |
|---|---|---|---|---|
| 1 | திரு. ஆர்.அசோக்குமார், 239, அன்னை அஞ்சுகம் நகர், கும்பகோணம். | 12,43,548.83 | 12,43,401.81 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (–) 0.01% குறைவு |
| 2 | திருவாளர்கள். மித்தேஷ் கன்ஸ்ட்ரக்சன் கும்பகோணம். | 12,43,548.83 | 12,71,799.34 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (+)2.27 % அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.அசோக்குமார், கும்பகோணம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கான செலவினத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மின்சார வாரியத்திடமிருந்து சாலை சீரமைப்புக் கட்டணம் பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**ந.க. எண் 889–1/2026/இ2**

482
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது

**மேயர்**
**கும்பகோணம் மாமன்றம்**